==========
Language in India www.languageinindia.com **ISSN 1930-2940 Vol. 23:4 April 2023**
==========

திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல்

அகராதியிலிருந்து தமிழ் வினையடிகள்

(Tamil Verbal Bases from *Dravidian Etymological Dictionary* – A Research Report in Tamil)

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

Prof. S. Rajendran

அமிர்தா விஷ்வ வித்யபீடம், கோயம்புத்தூர்

rajushush@gmail.com

கோயம்புத்தூர்

ஏப்பிரல் 2023

ஆசிரியர் உரை

பழந்தமிழில் காணப்படும் வினையடிகளுக்குத் திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து நோக்கீட்டு எண்கள் தரும் நோக்கத்திற்காகத்தான் நான் திராவிட சொற்பிறப்பியல் அகராதியை ஆயத்தொடங்கினேன். ஒவ்வொரு நோக்கீட்டு எண்ணின் கீழும் தரப்பட்டுள்ள சொற்களும் அர்த்தங்களும் பல வரலாற்று மொழியியல் செய்திகளை எனக்கு இயம்பின. எனவே திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள சொற்களை அதில் தரப்பட்டுள்ள நோக்கீட்டு எண்கள் அடிப்படையில் தரவதோடு எனது ஆய்வை நிறுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. அவ்வகராதி வெளிப்படுத்தும் வரலாற்று மொழியியல் செய்திகளைத் தொகுத்துத் தர விரும்பி நான் செய்திகளைத் திரட்டத் தொடங்கினேன். இது மிகப்பெரிய ஆய்வுக்கு வழிவகுக்கும் என்னை ஆய்வின் ஆழத்திற்குக் கொண்டு சென்று மூழ்கடித்துவிடம் என்று உணர்ந்தபோது அத்தகைய எண்ணத்தைக் கைவிட்டு திராவிட சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து ஒருசில நோக்கீட்டு எண்களின் கீழ்வரும் தமிழ் வினையடிகளை மட்டும் எடுத்துக்கொண்டு வரலாற்று மொழியியல் நோக்கில் எனக்குப் பட்ட சில செய்திகளை இச்சிற்றேட்டின் இரண்டாம் இயலில் விளக்கி உள்ளேன். மூன்றாம் இயலில் சொற்பிறப்பு அகராதியிலிருந்து எனக்குக் கிடைத்த வினையடிகளை (தனிநிலை மற்றும் ஆக்க வினையடிகளை) திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள நோக்கீட்டு எண்கள் அடிப்படையில் பட்டியலிட்டுள்ளேன். இத்தகைய ஆய்வு எத்தகை விளைவுகளை வெளிப்படுத்தும் யாருக்குப் பயன்படும் என்று எனக்குத் தெரியவில்லை.

இச்சிற்றேடு செம்மொழித் தமிழாய்வு மைத்திய நிறுவனத்தில் "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis of Tamilverbal Bases)" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத்திட்டதின் விளைவாக 2008-இல் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் ஒரு பகுதியாகும். இவ்வியலை விரிவுபடுத்தி வேண்டிய மாற்றங்கள் செய்து Language in India மூலம் இதை வெளியிடுகின்றேன். ஒட்டுமொத்தமான நூலும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்படும் எனக் காத்திருந்தேன். இதுவரை அது நிறைவேறாததால் தற்போதைய சிற்றேட்டை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

அன்புடன்

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்க எண்
1	அறிமுகம்	4-5
2	திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல் அடிப்படையில் சில வினைகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு	6-23
3	திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து கிடைக்கப்பெறும் வினையடிகள்	24-198
4	முடிவுரை	199
	நோக்கீடுகள்	200

1. அறிமுகம்

இச்சிற்றேடு செம்மொழித் தமிழாய்யு மத்திய நிறுவனத்தில் "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis of Tamilverbal Bases)" என்ற தலைப்பில் 2008-இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் (இராசேந்திரன் 2008) ஒரு பகுதியாகும். இவ்வாய்வில் முதலில் வினை அடிகள் அவற்றின் உருனியல், உருபொலியனியல் பண்புக்கூறுகள் அடிப்படையில் வகைப்பாடு செய்யப்பட்டன. ஏற்கனவே செய்யப்பட்ட முயற்சிகள் பற்றி விளக்கமாகக் கூறுப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து வினை அடிகளின் சொல்சார் மாற்றம், பொருண்மையியல் மாற்றம், வடிவமாற்றம், உருபொலியனியல் மாற்றம், இலக்கண மாற்றம் என்பன குறித்து பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சான்றுகள் அடிப்படையில் விளக்கம் தரப்பட்டுள்ளன. இச்சிற்றேட்டிற்கு எடுத்துக்கொண்ட பகுதி பழந்தமிழில் காணப்படும் வினையடிகளுக்குத் திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து நோக்கீட்டு எண்கள் தரும் நோக்கமாகத்தான் முதலில் கருதப்பட்டது. இதற்காகத்தான் திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி ஆயப்பட்டது. அவ்வாறு செய்கையில் ஒவ்வொரு நோக்கீட்டு எண்ணின் கீழும் தரப்பட்டுள்ள சொற்களும் அர்த்தங்களும் பல வரலாற்று மொழியியல் செய்திகளை வெளிப்படுத்தி நின்றன. எனவே திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள சொற்களை அதில் தரப்பட்டுள்ள நோக்கீட்டு எண்கள் அடிப்படையில் தருவதோடு ஆய்வை நிறுத்திக்கொள்ள இயலாது என்று தோன்றியது. அவ்வகராதி வெளிப்படுத்தும் வரலாற்று மொழியியல் செய்திகளைத் தொகுத்துத் தர விரும்பி செய்திகள் திரட்டப் பட்டன. இது மிகப்பெரிய ஆய்வுக்கு வழிவகுக்கும் ஆய்வின் ஆழத்திற்குக் கொண்டு சென்று மூழ்கடித்துவிடம் என்று உணர்ந்தபோது அத்தகைய எண்ணம் கைவிடப்பட்டு திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து ஒருசில நோக்கீட்டு எண்ணின் கீழ்வரும் தமிழ் வினையடிகளை மட்டும் எடுத்துக்கொண்டு வரலாற்று மொழியியல் நோக்கில் அவ்வினைகள் ஆயப்பட்டன. இந்த ஆய்வின் விளைவுகள் தான் இச்சிற்றேட்டின் இரண்டாம் இயலாகப் பரிமளித்துள்ளது. மூன்றாம் இயலில் திராவிடச் சொற்பிறப்பு அகராதியிலிருந்து கிடைத்த வினையடிகள் (தனிநிலை மற்றும் ஆக்க வினையடிகளை) திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள நோக்கீட்டு எண்கள் அடிப்படையில் பட்டியலிட்டுள்ளன.

பரோ மற்றும் எமினோ (Burrow & Emeneau) என்போரால் உருவாக்கப்பட்ட திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் (Dravidian Etymological Dictionary - Revised (DEDR)) (இங்கு நமது தேவைக்காக திசொபி அகராதி எனச் சுருக்கித் தரப்பட்டுள்ளது.) காணப்படும் வினையடிகள் யாவும் திரட்டப்பட்டு நோக்கீட்டு எண்ணுடன் இச்சிற்றேட்டில் தரப்பட்டுள்ளன. அவர்களது அகராதியைத் தழுவி அவற்றின் அர்த்தங்களும் அப்படியே

தமிழாக்கம் செய்து தரப்பட்டுள்ளன. முதலில் ஒரு பின்னிணைப்பாகத் தரத்தான் இது திட்டமிடப்பட்டது. ஆனால் இவ்வகராதியில் காணப்படும் செய்திகள் வினையடிகளைப் பட்டியலிட்டால் மட்டும் போதாது ஆழ்ந்த வரலாற்று மொழியியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திற்குக் கொண்டுசென்றது. அரகாதியில் நோக்கீட்டு எண் ஒவ்வொன்றின் கீழும் சொற்கள் அவற்றின் அர்த்தங்களுடன் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நோக்கீட்டு எண்ணின் கீழும் அடக்கப்படும் சொற்கள், குறிப்பாக வினைசொற்களும் பெயர்ச்சொற்களும் அவற்றின் அர்த்தங்களுடன் நமக்கு தருவது பெரிய சொற்பிறப்பு அல்லது சொல்லாக்க வரலாறாகும். இது பரந்த வரலாற்று மொழியியல் ஆய்வுக்குரிய தரவாகும். வெறும் பட்டியல் அல்ல. எனவே இதை மனதில் கொண்டு 'திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல் அடிப்படையில் சில வினைகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு' மற்றும் 'திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியிலிருந்து கிடைக்கப்பெறும் வினையடிகள்' என இரண்டாகப் பகுக்கபட்டு வரலாற்று மொழியியல் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

2. திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல்அகராதியிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல் அடிப்படையில் சில வினைகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு

ஒவ்வொரு நோக்கிட்டு எண்ணையும் எடுத்துக்கொண்டு பழந்தமிழ் நூற்களின் சொல்லடைவுகள் மற்றும் பிற அகராதிகளில் தரப்பட்டுள்ள சொற் பதிவுகளுடன் ஒப்பிட்டு வரலாற்று மொழியியல் ஆய்வு செய்யப்பட வேண்டும். அத்தகை ஆய்வை மேற்கொள்ள ஆர்வம் இருந்தாலும் ஆர்வத்தை அடக்கிக் கொண்டு, 17 நோக்கீட்டு எண்களை மட்டும் எடுத்துக்கொண்டு அதில் வரும் வினையடிகளையும் அர்த்தங்களையும் ஒப்பிட்டு மாற்றங்களை அல்லது ஆக்கங்களைப் பற்றி விளக்க இங்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இராசேந்திரன் "Development of verbal bases in Sangam Literature)" என்ற கட்டுரையில் பழந்தமிழில் புதிய வினையடிகளின் ஆக்கம் பற்றி விரிவாக விளக்கியுள்ளார் (Rajendran 2021). மேலும் "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis of Tamilverbal Bases)" என்ற செந்தமிழ் தமிழாய்வு மையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அந்நிறுவனத்தால் வெளியிட உள்ள ஆய்வேட்டில் (இராசேந்திரன் 2008) பழந்தமிழ் இலக்கியங்கள் அடிப்படையில் வினையடிகளின் சொல்சார் மாற்றம், கடன்வினையடிகள், வினையடிகளின் இழப்பு, வினையடிகளின் வடிவமாற்றம், வினையடிகளின் உருபனியல் மாற்றம், வினையடிகளின் இலக்கணமாற்றம் பற்றி விளக்கியுள்ளார். முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள வினையடிகளின் எல்லா ஆக்கங்களையும் மாற்றங்களையும் இழப்புகளையும் திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி வெளிப்படுத்தி நிற்கின்றது. பெயர்களிலிருந்து புதிய வினையடிகள் உருவாகுதல், பெயரடைகளிலிருந்து புதிய வினையடிகள் உருவாகுதல், ஒலிப்புக் குறிப்புச் சொற்களிலிருந்து புதிய வினையடிகள் உருவாகுதல், செய்து வினை எச்சத்திலிருந்து புதிய வினையடிகள் உருவாகுதல், பொருண்மை மாற்றமும் நீட்சியும் என்பனவற்றைச் திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி தெளிவாக விளக்கி நிற்கின்றது. மேலும் வரலாற்று மொழியியல் அடிப்படையில் வினையடிகளின் இழப்பு என இராசேந்திரனால் (2008) விளக்கப்பட்டுள்ள வினையடிகளின் இழப்புகளைச் திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இராசேந்திரனால் (2008) வரலாற்று மொழியியல் அடிப்படையில் வினையடிகளின் வடிவ மாற்றம்,

வினையடிகளின் உருபனியல் மாற்றம் எனக் குறிப்பிடப்பட்ட தகவல்களுக்குச் சான்றுகளைத் திராவிடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி அள்ளித்தருகின்றது.

எடுத்துகாட்டாக 17 நோக்கீட்டு எண்களில் தரப்பட்டுள்ள வினையடிகள் அவற்றின் வடிவம் அடிப்படையிலும் அர்த்தங்கள் அடிப்படையிலும் ஆக்கங்கள் அடிப்படையிலும் ஒற்றுமை பட்டும் வேறுபட்டு நிற்பது விளக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை வினையாக்க ஒட்டுக்களைப் பிரித்தெடுத்து விளக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.அல

நோக்கீட்டு எண் 236 என்பதன் தலைப்புச் சொல் 'துன்புறு, வருந்து' எனப் பொருள் கொள்ளப்படும் *அல* என்பதாகும். இவ்வெண்ணிற்குள் *அல, அலங்கு, அலசு, அலமரு, அலமல, அலவு, அலு, அலை, அலைசு, அல்லாடு* என்ற பத்து வினைகள் அவற்றின் வேறுபட்ட அர்த்தங்களுடன் தரப்பட்டுள்ளன. அகராதியில் ஒரு நோக்கீட்டும் எண்ணின் கீழ் தரப்பட்டுள்ள சொற்கள் ஓரளவுக்கு அகரவரிசை வரிசையில் தரப்பட்டுள்ளதால் முதலில் தரப்பட்டுள்ள *அல* என்பதிலிருந்து பிற சொற்கள் பிறந்தன என எடுத்துக்கொள்ள இயலாது. இவற்றை பின்வருமாறு பிரித்து அவற்றின் ஆக்கத்தை அல்லது ஆக்க ஒட்டுகளை அறிந்துகொள்ளளாம்.

அல = அல்-அ

அலங்கு = அல்-அ-ங்கு

அலசு = அல்-அ-சு

அலவு = அல்-அ-வு

அலு = அல்-உ

அலை = அல்-ஐ

அலைசு = அல்-ஐ-சு

அல்லா = அல்-ல்-ஆ

அலமல = அல்-அ-மல

அலமரு = அல்-அ-மரு

அல்லாடு = அல்-ஆடு

மேற்கண்ட பகுப்பாய்விலிருந்து *அ, ங்கு, சு, வு, உ, ஐ, ஐ-சு* என்பன ஆக்க ஒட்டுக்களாகும் என்றும். *ஆடு* என்பது வினையாக்கியாக வரும் துணை வினையாகும் என்றும் அறிய முடிகின்றது.

ஒவ்வொரு வினைகளின் கீழும் தரப்பட்டுள்ள அர்த்தங்கள், இவ்வினைகள் எவ்வறு பொருள் அடிப்படையில் ஒன்றாகவும் வேறுபட்டும் நிற்கின்றன என்பதை அறிந்து கொள்ள இயலும். மேலும் மேலும் ஒவ்வொரு வினைகளின் கீழ் தரப்பட்டுள்ள அர்த்தங்கள் அவ்வினைகளின் பொருண்மை நீட்சியை உணர்த்தி நிற்கும்.

அலP	துன்புறு, வருந்து, தாழ்வுமனப்பான்மையால் வருந்து, பற்றாக்குறையாய் இரு	236
அலுP	சோர்வாய் இரு, அதிக வேலை, பராமரிப்பு காரணத்தால் களைப்படை	236
அலங்கு	மனக்கலங்கு, தொந்திரவுக்கு உள்ளாகு	236
அலவு	மனங்கலங்கு	236
அலமல	குழம்பு, திகை, கவலைகொள்	236
அலமரு	குழம்பு, வருந்து	236
அலசு	துன்புறு, வருந்து, சோர்வடை, தளர்	236
அல்லா	துன்புறு	236
அல்லாடு	துன்புறு	236

P என்பது ஒரு உருபொலியன் குறியீடாகும். இது சில உருபொலியனியல் மாற்றங்களை அல்லது வினையடிகளின் செயல்பாட்டு மாற்றங்களை விளக்கி நிற்கும்.

2. அலம்பு

நோக்கீட்டு எண் 240-இன் தலைப்புச் சொல் 'நகர், அசை' எனப் பொருள் கொள்ளப்படும் *அலங்கு* என்பதாகும். 240-இன் கீழ் *அலங்கு, அலக்கு, அலமறு, அலம்பு, அலுங்கு, அலுக்கு, அலை, அலைP, அலைசு, அல்லாடு* என்ற பத்து வினைகள் தரப்பட்டுள்ளன. முன்னர் கூறியதுபோல் அகராதியில் ஒரு நோக்கீட்டும் எண்ணின் தரப்பட்டுள்ள சொற்கள் ஓரளவுக்கு அகரவரிசை வரிசையில் தரப்பட்டுள்ளதால் முதலில் தரப்பட்டுள்ள *அலங்கு* என்பதிலிருந்து பிற சொற்கள் பிறந்தன என எடுத்துக்கொள்ள இயலாது. இவ்வினைகள் அர்த்தம் அடிப்படையிலும்

ஆக்கம் அடிபடையிலும் தொடர்புள்ளவை அல்லது ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை என்பதன் அடிப்படையில் ஒரே நோக்கீட்டு எண்ணின் கீழ் தரப்பட்டுள்ளன.

நாம் ஒப்பீட்டு அடிப்படையில் *அல்* என்பதை வேர்ச் சொல்லாகக் கொண்டால் மேற்சொன்ன சொற்களை பின் வருமாறு பிரித்து ஆக்க ஒட்டுக்களை ஓரளவுக்கு அறிந்துகொள்ளலாம்.

அலங்கு = அல்-அ-ங்கு

அலக்கு = அல்-அ-க்கு

அலம்பு = அல்-அ-ம்பு

அலை = அல்-ஐ

அலைசு = அல்-ஐ-சு

அல்லாடு =அல்-ல்-ஆடு

அலமரு = அல்-அ-மரு

ங்கு, க்கு, ம்பு, ஐ, ச்சு என்பன ஆக்க ஒட்டுக்கள் என அறிய முடிகின்றது. *அலைச்சு* என்பது *அலைத்து* என்பதன் அண்ணமாக்கப் பட்ட வடிவமாகும். *மரு, ஆடு* என்பனவற்றைக் துணைவினைகளாகக் கருத இயலும்.

ஒவ்வொரு வினைகளின் கீழும் தரப்பட்டுள்ள அர்த்தங்கள், இவ்வினைகள் எவ்வறு பொருள் அடிப்படையில் ஒன்றாகவும் வேறுபட்டும் நிற்கின்றன என்பதை அறிந்து கொள்ள இயலும். மேலும் மேலும் ஒவ்வொரு வினைகளின் கீழ் தரப்பட்டுள்ள அர்த்தங்கள் அவ்வினைகளின் பொருண்மை நீட்சியை உணர்த்தி நிற்கும்.

அலக்கு	நகர்த்து, அசை	240
அலங்கு	நகர், அசை, ஊசலாடு, இயக்கத்தில் இரு	240
அலம்பு	நகர், (குறைகுடம் போல்) ததும்பு, நடத்தையில் பிசகு, மாறுபடு, அலை, பயத்தால் அலையச்செய்	240
அலை	அலை, அசை, (தண்ணீரில் பிம்பம் போல்) அசை, பொருக்கு வேண்டி அங்கும் இங்கும் அலை, அலைத்து திரி, தள்ளாடு	240
அலைP	இயக்கு, அசை, அங்கும் இங்கும் அலையச்செய்,	240

அலைசு	அசை	240
அலமரு	சுழல்	240
அல்லாடு	ஓரிடத்திலுருந்து மற்றொரு இடத்திற்கு அலை	240

அலை என்ற வினைச் சொல் 240, 263 என்ற இரு நோக்கீட்டு எண்களில் வந்து அவை இரண்டும் பிறப்பியல் அடிப்படையில் வேறுபட்ட சொற்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. 240 நோக்கீட்டு எண்ணின் கீழ் வரும் *அலை* செயப்படுபொருள் குனிறிய வினை, குன்றா வினை என வேறுபட்டு சொற்திரிபு வகுப்பு அடிப்படையில் *அலை, அலைP* என வேறுபடும்.

ஒவ்வொரு வினைகளுக்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களும் அர்த்த நீட்சியைக் காட்டி நிற்கின்றன. பின்வரும் எடுத்துக்காட்டு இதை உணர்த்தி நிற்கும்.

அலை	அலை, அசை, (தண்ணீரில் பிம்பம் போல்) அசை, பொருளுக்கு வேண்டி அங்கும் இங்கும் அலை, அலைத்து திரி, தள்ளாடு	240
அலைP	இயக்கு, அசை, அங்கும் இங்கும் அலையச்செய்,	240

அசை என்ற பொருள் நீட்சி அடைந்து தள்ளாடு என நீட்சியுற்றமையை நாம் அறிய முடிகின்றது.

240 நோக்கீட்டு எண்ணின் கீழ் *அலம்பு* என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

அலம்பு	இயங்கு, (குறைகுடம் போல்) ததும்பு, நடத்தையில் பிசகு, மாறுபடு, அலை, பயத்தால் அலையச்செய்	240

ஆனால் அதே சமயம் 246 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் அதே வடிவமுடைய *அலம்பு* 'கழுவு' எனப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு பல செய்திகளைச் சொற்பிறப்பு அகராதியிலிருந்து பெறலாம்.

3. ஆர்

367 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் *ஆர், ஆரவாரி, ஆரி, அரற்று* என்ற வினையடியகள் தரப்பட்டுள்ளன. இவற்றின் ஆக்கங்களை பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

ஆர்P: ப்ப்- என்ற எதிர்கால உருபுயும் -த்த்- என்ற இறந்தகால உருபையும் ஏற்கும்

ஆரவாரிP = ஆர்-அ-வாரி

ப்ப்- என்ற எதிர்கால உருபுயும் -த்த்- என்ற இறந்தகால உருபையும் ஏற்கும்

ஆரி= ஆர்-இ

அரற்று = அர-ற்று

ஆர்வாரி என்பது *ஆர்* என்ற மூல வினையிலிருந்து *-வாரி* என்ற ஒட்டால் விளைந்த இரண்டாம் நிலை வினையாகக்கொள்ளலாம். அல்லது *ஆர்* என்ற மூல வினையடியிலிருந்து விளைந்த *ஆரவாரம்* என்ற வினைப்பெயரிலிருந்து *-அம்* நீங்க *-இ* என்ற வினையாக்க ஒட்டால் ஆக்கப்பட்டதாய்க் கருத இடமுண்டு. *ஆரி* என்ற இரண்டாம் நிலை வினை *ஆர்* என்ற மூலவினையிலிருந்து *-இ* என்ற ஆக்க ஒட்டால் விளைந்த மற்றொரு வினையாகக் கருதலாம். *அரற்று* என்பதை *ஆர்* என்ற மூலவினையடியிலிருந்து -ற்று என்ற ஆக்க ஒட்டால் மற்றும் மூலவினையடியில் ஏற்பட்ட உருபொலியனியல் மாற்றங்களால் ஆக்கப்பட்டதாய் விளக்கலாம். சொற்பிறப்பியல் அகராதியில் குறிப்பிடப்படாத ஆனால் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள *ஆர்ப்பரி* என்ற வினையும் *ஆர்* என்ற மூல வினையிலிருந்து -ப்பரி என்ற ஆக்க ஒட்டின் சேர்க்கையால் உருவானதாகக் கருத இடமுண்டு. ஆக்கப்பட்ட வினையடிகள் மூல வினையடியிலிருந்து பெறப்பட்டதை சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள அர்த்தங்களிலிருந்து விளங்கும்.

ஆர்P	சப்பதமிடு	367
ஆரவாரிP	பெரும் ஓசையிடு, கர்ஜி	367
ஆரி	சப்பதமிடு	367
அரற்று	புலம்பு, அழு, மனக்கிளர்ச்சியால் கத்து, ஒலி, துக்கப்படு	367

4. இழி

502 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் இழி, இழிP, இழிச்சு, இழித்து என்ற நான்கு வினைகள் வருவதைக் காணலாம். இவற்றின் ஆக்கங்களை பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

இழி: -வ்- என்ற எதிர்கால உருபுயும் -ந்த்- என்ற இறந்தகால உருபையும் ஏற்கும்

இழிP --ப்ப்- என்ற எதிர்கால உருபுயும் -த்த்- என்ற இறந்தகால உருபையும் ஏற்கும்

இழிச்சு = இழி-ச்சு

இழித்து = இழி-த்து

இழி என்பதை மூலவினையடியாகக் கொண்டு பிறவினையடிகளை அவற்றிலிருந்து ஆக்கப்பட்டவையாகக் கொண்டு ப்--ச்சு, த்து என்பனவற்றை ஒப்பீடு அடைப்படையில் வினையாக்க ஒட்டுக்களாகக் கருதலாம். ஆக்கப்பட்ட வினையடிகள் மூல வினையடியிலிருந்து பெறப்பட்டதை சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள அர்த்தங்களிலிருந்து விளங்கும்.

இழி	இறங்கு, கீழே விழு, இழிவாக உணர்	502
இழிP	கீழே இறக்கு, வெறு	502
இழிச்சு	கீழே இறக்கு, கீழே இறங்கச்செய், (வரி போன்றவை) கட்டு, (கட்டிடம் போன்றவற்றை) இடி	502
இழித்து	கீழே இறக்கு, கீழே இறங்கச்செய், (வரி போன்றவை) கட்டு,	520

5. உணங்கு

601 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் *உணங்கு, உணக்கு, உணத்து* என்ற மூன்றுவினையடிகள் வருகின்றன. இவற்றின் ஆக்கங்களை பின்வருமாறு ஆய்ந்து அறியலாம்.

உணங்கு = உண்-அ-ங்கு

உணக்கு = உண்-அ-க்கு

உணத்து = உண்-அ-த்து

உண என்பதை மூல வினைவேராகக் கொண்டு இவற்றின் ஆக்கங்களை விளக்கலாம். உண என்ற மூலவினைவேரிலிருந்து *-ங்கு* சேர்ந்து *உணங்கு* என்ற செயப்படுபொருள் குன்றிய வினை ஆக்கப்பட்டதாகவும் அதிலிருந்து ங்கு> ங்கு என ஒலியனியல் மாற்றத்தால் செயப்படுபொருள் குன்றாவினை விளைந்ததாகவும் கருத இயலும். மேலும் *உண* என்ற வினை வேரிலிருந்து *-த்து*

என்ற ஆக்க ஒட்டால் *உணத்து* என்பது விளைந்ததாகவும் கருத இயலும். சொற்பிறப்பியல் அகராதியில் தரப்பட்டுள்ள அர்த்தங்கள் இதை உறுதி செய்யும்.

உணங்கு	(தானியம், காய்கறி, மீன் போல்) உணங்கு, ஒல்லியாகு, சுருங்கு, இலை போல் உலர்ந்து சுருங்கு, நலி	601
உணக்கு	உணங்கச் செய், சூரிய வெளிச்சத்தில் உணக்கு	601
உணத்து	உணங்கச்செய், இளைக்கச்செய்	601

அர்ந்தங்கள் ஓரளவுக்கு வேறுபட்டாலும் அடிப்படை அர்த்தம் மாறாதிருப்பதை அறியலாம்.

6. உறு

710 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் பின்வரும் ஆறு வினையடிகள் வருகின்றன: *உறு, உறுத்து, உறை, உற, உறங்கு, உறழ்*. இவற்றைப் பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

உறு = உற்-உ

உறுத்து = உற்-உ-த்து

உறை = உற்-ஐ

உற= உற்-அ

உறங்கு = உற-ங்கு

உறழ் = உற்-அழ்

உற் என்ற மூலவினையடியிலிருந்து *உ* என்ற வடிவாக்க ஒட்டால் *உறு* என்பதும், *அ* என்ற வடிவாக்க ஒட்டால் *உற* என்பதும் விளைந்ததாய்க் கருதலாம். *உறு* என்பதிலிருந்து *-த்து* என்ற வினையாக்க ஒட்டு சேர்ந்து *உறுத்து* என்ற இரண்டாம் நிலை வினைந்ததாகவும், *உற* என்பதிலிருந்து -ங்கு என்ற வினையாக்க ஒட்டு சேர்ந்து *உறங்கு* என்ற இரண்டாம் நிலை வினை விளைந்ததாகவும் *உற* என்பதில் -ழ் என்ற வினையாக்க ஒட்டு இணைந்து *உறழ்* என்ற இரண்டாம் நிலை வினை விளைந்ததாகவும் கருதலாம். இவை வெளிப்படுத்தும் அர்த்தங்கள் ஒப்புமையையும் வேற்றுமையையும் காட்டுவதைப் பின்வரும் அட்டவணை வெளிப்படுத்தும்:

உறு	நட, சம்பவி, வசி, தொடுதலால் தொடர்புகொள், காதலி	710
உறுத்து	இருக்கச்செய், தொடர்புகொள்ளச்செய், கைதட்டு	710

உற	கூடு, ஒன்றுகூடு	710
உறங்கு	வசி, தாமசி	710
உறழ்	அடர்ந்திரு, அடர்த்தியாயிரு, கூடியிரு	710

இவ்வினையடிகளின் ஆக்கத்தால் விளையும் பொருண்மை நீட்சி தற்போக்கனதாகத் தெரிகின்றது.

7.உளுக்கு

2702 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் *உளுக்கு, சுளுக்கு, உளை* என்ற மூன்று வினைகள் தரப்பட்டுள்ளன. இவற்றின் ஆக்கங்களை பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

உளுக்கு = உள் –க்கு

சுளுக்கு = சுள்-க்கு

உளை = உள்-ஐ

-க்கு, -ஐ என்பனவற்றை ஆக்க ஒட்டுக்களாக எடுக்க இயலும். மூல வேரைச் *சுள்* என்பதாகக் கருத இயலும். *சுள்* என்ற வேர் *ச்-* என்ற மெய்யெழுத்தை இழந்து *உள்* என்ற வேரை ஆக்கியுள்ளது வரலாற்று அடிப்படையிலான மாற்றமாகும். இவைகள் பொருண்மை அடிப்படையில் ஒற்றுமைப் பட்டிருப்பதையும் வேறுபட்டிருப்பதை பின்வரும் அட்டவணையில் இருந்து அறியலாம்.

சுளுக்கு	உளுக்கு	2702
உளுக்கு	சுளுக்கு	2702
உளை	களைப்பால் அல்லது குளிரால் அல்லது வாதத்தால் கைகால்களில் வலியோ வேதனை அனுபவி, வயிற்றிழைச்சலால் வலி அனுபவி, மனது வலி, அழி	2702
உளைP	துன்புறுத்து, தொந்தரவுசெய், வெறு	2702

சுளுக்கு, உளுக்கு என்பனவற்றின் அர்த்தம் மாறுபடவில்லை. *உளை* என்பது 'துன்புறுத்து, தொந்தரவு செய்' என மாறியுளது பொருண்மை வடிவமாற்றம் அடிப்படையிலான பொருண்மை நீட்சி அல்லது மாற்றம் ஆகும்.

8. எழு

851(a) என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் பின்வரும் *ஏழு* வினைகள் வருகின்றன: எழு, *எழுப்பு, எழும்பு, எம்பு, எழுவு, எவ்வு, எடு*. இவற்றின் ஆக்கங்களைப் பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

எழு = எழு

எழுப்பு = எழு-ப்பு

எழும்பு = எழு-ம்பு

எழுவு = எழு-வு

எவ்வு = எ-வ்வு

எடு = எ-டு

எழு	இருக்கையிலிருந்து அல்லது படுக்கையிலிருந்து எழு, உயர், தோன்று	851
எழும்பு	எழுந்திரு, எழு	851
எழுப்பு	எழச்செய், உணரச்செய்	851
எழுவு	எழச்செய், உயரச்செய்	851
எம்பு	எழு, உயர்	851
எவ்வு	உயர்	851
எடு	தூக்கு, உயர்த்து, தாங்கு, சும, பிடி, திராசில் நிறு, மேற்கொள், உயர்ந்த குரலில் கூறு அல்லது பாடு, உயர்வாய்ப் பேசு, (சுவர் போல்) கட்டு, நீக்கு, (குரங்கின் கன்னம் போல்) உப்பு, (நெற்றி போல்) உயந்திரு, (காது அல்லது மூக்கு போல்) எடுப்பாய் இரு,	851

இந்த ஏழு வினைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரும்பான்மை அடிப்படையில் *ஏழு* மூலவினையாகத் தோன்றுகின்றது. ஆனால் இந்த ஏழு வினைகளிலும் பொதுவாய் அமைவது எ மட்டும் தான். எ என்பதிலிருந்து பிற வினைகள் ஆக்கப்படதாய்க் கருத இயலும். அப்படி இல்லை

என்றால் *எழு* என்பதிலிருந்து *எழும்பு, எழுவு* என்பன முறையே *-ம்பு, வு* என்ற ஆக்க ஒட்டுக்களால் ஆக்கப்படதாகவும் *எழும்பு* என்ற செயப்படுபொருள் குன்றிய வினையிலிருந்து *ஏழுப்பு* என்ற செய்ப்படுபொருள் குன்றா வினை ம்பு > ப்பு என்ற ஒலியனியல் மாற்றத்தால் விளைந்ததாகவும் விளக்க இயலும். *எம்பு, எவ்வு, எடு* என்பன *எழு* என்பதிலிருந்து *ழு* கெட *-ம்பு, -வ்வு, டு* என்ற ஒட்டுக்களின் சேர்க்கையால் விளைந்ததாய் விளக்க இயலும்.

9. ஏறு

916 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் பின்வரும் மூன்று வினைகள் வருகின்றன: எறு, ஏற்று, ஏல். இவற்றை பின்வருமாறு ஆயலாம்.

ஏறு = ஏ- று

ஏற்று = ஏ-ற்று

ஏல் = ஏ-ல்

ஏறு	உணரமான ஒர் இடத்தை அடையும் பொருட்டு (மேலே) செல்லு, எண்ணிக்கை, எடை அதிகரி, விலை ம்ஏறு	916
ஏற்று	(வாகனத்தில்) ஏறச் செய், தூக்கு, விலை ஏறச் செய்	916
ஏல்	மிகுதியாய் இரு, தூக்கத்திலிருந்து எழு, தாங்கு, எடு, சும	916

இந்த மூன்றிலும் பொதுவாய் அமையும் ஏ என்ற மூலவினை அடியிலிருந்து -று, -ற்று, -ல் என்ற ஆக்க ஒட்டுக்களால் இம்மூன்று வினைகளும் ஆக்கப்பட்டதாய்க் கருத இயலும். இல்லாவிடில் *ஏல்* என்ற மூல வினையிலிருந்து -து என்ற ஆக்க ஒட்டு சேர்ந்து *ஏறு* (< ஏல்+து)என்ற செயப்படுபொருள் குன்றிய வினை விளைந்ததாகவும் அதிலிருந்து ற் > ற்ற் என்ற ஒலியனியல் மாற்றத்தால் *ஏற்று* என்பது ஆக்கப்பட்டதாகவும் விளக்க இயலும். இரண்டாவது விளக்கம் தான் சரி எனத் தோன்றுகின்றது.

10. ஒ

924 என்ற நோக்கீடு எண்ணின் கீழ் பின்வரும் வினைகள் பட்டியலிடப்பட்டுள்ளன: ஒ, ஒப்பு, ஒப்பி, ஒப்புவி, ஒவ்வு. இவற்றைப் பின்வருமாறு ஆயலாம்:

ஒ

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

ஒப்பு = ஒ-ப்பு

ஒப்பி = ஒ-ப்பி

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

ஒப்புவி = ஒ-ப்பு-வி

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

ஒவ்வு = ஒ-வ்வு

இந்த ஐந்து வினைகளிலும் பொதுவாக அமையும் ஒ என்ற வினைவேரிலிருந்து -ப்பு, ப்பி, -ப்பு-வி, -வ்வு என்ற ஆக்க ஒட்டுக்களால் இந்த ஐந்து வினைகளும் விளைந்ததாய்க் கருதலாம். -வி என்பதை காரணவாக்க ஒட்டாகக் கருத இயலும். இவை உணர்த்தும் அர்தங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

ஒP	(ஒன்று மற்றொன்றை) போல் இரு, ஒன்று மற்றொன்றுக்கு சமமாக இரு, பொருந்து, ஒத்திரு	924
ஒப்பிP	ஒப்பிடு, நிறுவு, ஒப்புக்கொள்ளச்செய், ஒப்படை	924
ஒப்பு	உடன்படு, இணங்கு	924
ஒப்புவிP	ஒப்படை, சரணடை	924
ஒவ்வு	ஒத்திரு, ஏற்றுக் கொள்ளும்படி இரு, மாறாதிரு	924

ஒ என்ற மூல வினையடியைச் செயப்படுபொருள் குன்றிய வினையடியுடன் *-ப்பு* ஒட்டு சேர்ந்து என்ற *ஒப்பு* என்ற செயப்படுபொருள் குன்றா வினை ஆக்கப்படதாயும் அதனுடன் காரணவாக்க ஒட்டு -வி சேர்ந்து காரண வினை விளைந்ததாகவும் விளக்க இயலும்.

11. ஒடி

946 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் பின்வரும் தமிழ் வினைகள் வரும்: *ஒடி, ஒடிP, உடை, உடைP, நொடிP* . இவற்றின் ஆக்கங்களைப் பின்வருமாறு பகுத்து ஆயலாம்.

ஒடி

(-வ்- என்ற எதிர்கால ஒட்டையும், -ந்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

ஒடிP

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

உடை

(-வ்- என்ற எதிர்கால ஒட்டையும், -ந்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

உடைP

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

நொடி = ந்-ஒடி

நொடி என்பது ஒடி என மாற்றமுற்றதாய்க் கருத இடமுண்டு. ஆனால் பிற திராவிட மொழிகளில் வரும் இனமொழி நிகர்ச் சொற்களைப் பார்க்கையில் ஒடி என்பதுதான் அடிப்படைச் சொல் எனத் தோன்றுகின்றது. ஒடி என்ற செயப்படுபொருள் குன்றியவினையிலிருந்து ஒடி என்ற செயப்பாடுபொருள் குன்றா வினை ஆக்கப்படதாக விளக்கலாம். உடை என்பது எவ்வாறு ஒடி என்பதிலிருந்து ஆக்கப்பட்டது என்று விளக்க இயலவில்லை. உ என்பது பேச்சு வழக்கில் ஒ ஆக மாறும் செயபாடு தமிழ் மொழியில் காணப்படுகின்றது: உடை > ஒடை, உடன்பிறந்தாள் > ஒடப்பிறந்தாள், உடனே > ஒடனே. நொடி என்பது ஒடி என்பதிலிருந்து விளைந்த பேச்சு வழக்குச் சொல் எனக் கருத இடமுண்டு.

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சொற்பிறப்பு அகராதியிலிருந்து எடுக்கப்பட்ட இவற்றின் அர்த்தங்கள் இவற்றின் வேறுபாட்டை பொருண்மை அடிப்படையில் வெளிப்படுத்தும்

ஒடி	இரண்டாகப் பிரி, முறி, தொடர்பறு	946
ஒடிP	துண்டாக்கு, ஒடியச்செய்	946
உடை	பானைபோல் உடை, (அழுத்தத்தால், கீழே விழுவதால்) துண்டாகு, பிள, அழி	946
உடைP	துணாடாக்கு, உடையச்செய்	946
நொடிP	ஒடி, முறி	946

12. கல

1299 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் கல, கலசு, கலவு, கலாவு என்ற நான்கு தமிழ் வினைகள் வருகின்றன. இவற்றைப் பின்வருமாறு பகுத்து ஆய இயலும்.

கலP

(-ப்ப்- என்ற எதிர்கால ஒட்டையும், -த்த்- என்ற இறந்தகால ஒட்டையும் ஏற்கும்)

கலசு =கல-சு

கலவு =கல-வு

கலாவு= கலா-வு

கல என்பதை அடிப்படை அல்லது மூல வினையடியாகக் கொண்டு பிற அடிகள் ஒட்டாக்கத்தால் விளைந்ததாய் விளக்கலாம். *கலசு* என்பது *கல* என்பதுடன் -சு என்ற ஆக்க ஒட்டைச் சேர்ப்பதாலும், *கலவு* என்பது *கல* என்பதுடன் -வு என்ற ஆக்க ஒட்டைச் சேர்ப்பதாலும், கலாவு என்பது கல என்பதுடன் -வு என்ற ஆக்க ஒட்டை சேர்ப்பதாலும் கல என்பது கலா என நீட்சியுறுவதாலும் ஆக்கப்பட்டதாய்க் கருத இயலும்.

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சொற்பிறப்பு அகராதியிலிருந்து எடுக்கப்பட்ட இவற்றின் அர்த்தங்கள் இவற்றின் வேறுபாட்டை பொருண்மை அடிப்படையில் வெளிப்படுத்தும்.

கல	சேர், நண்பர்களாக இணை, புணர்	1299
கலசு	ஒன்றுசேர்	1299
கலவு	கல	1299
கலாவு	கல, ஒன்றுசேர்	1299

13 .சுரி

2684 என்ற நோக்கீடு எண்ணின் கீழ் *சுரி, சுரிP, சுருள், சுருட்டு* என்ற நான்கு வினைகள் அடக்கப்பட்டுள்ளன. *சுரி* தலைப்புச் சொல்லாகத் தரப்பட்டுள்ளது. இவற்றை பின்வருமாறு பிரித்து அவற்றின் ஆக்கத்தை அறியலாம்.

சுரி = சுர்-இ

சுருள் = சுர்-உள்

சுருட்டு = சுர்-உ-ட்டு

இப்பிரித்தாய்விலிருந்து *இ, உள், உ-ட்டு* என்பனவற்றை ஆக்க ஒட்டுகளாக எடுத்துக்கொள்ள இயலும். *சுருட்டு* என்பது *சுருள்* என்பதன் செய்து வாய்பாட்டு வினையெச்சதாகும். முன்னர்

குறிப்பிடதுபோல் இவ்வாய்பட்டு வினையெச்சம் *சுருள்* என்ற செயப்படுபொருள் குன்றிய வினையிலிருந்து ஆக்கப்பட்ட செயப்படுபொருள் குன்றா வினை எனக் கருத இயலும்.

ஒவ்வொரு வினைகளுக்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களும் அர்த்த நீட்சியைக் காட்டி நிற்கின்றன.

சுரி	சங்குபோல் புரி உடையதாக இரு, சுழல், நீர் போல் சுழி	2684
சுரிP	காற்றுபோல் சுழல், சுருள் , வட்டத்தில் இரு	2684
சுருள்	உள்நோக்கி வட்டவடிவமாக மடங்கு, உருள், முடிபோல் சுருள்	2684
சுருட்டு	உள் நோக்கி மடங்குமாறு சுற்று, சுருளச்செய், மடக்கு, முறுக்கு	2684

14.சோர்

2883 என்ற நோக்கீட்டு எண்ணின் கீழ் *சோர்,சொரி, சுர* என்ற மூன்று வினையடிகள் தரப்பட்டுள்ளன. இவற்றின் ஆக்கங்களைப் பிரித்து ஆய்வது கடினம். *சோர், சுர், சொர்* என்பவைகளை அடிப்படைகளாக எடுத்துக்கொண்டால் *-இ, -அ* என்பனவற்றை ஆக்க ஒட்டாக எடுத்துக்கொள்ளலாம். *சோர், சுர், சொர்* என்பனவற்றின் ஆக்கங்களை உயிர் ஒலியின் மாற்றத்தால் வந்ததாகக் கொள்ள இயலும்.

இவற்றின் பொருண்மை அடிப்படையிலான வேறுபாடுகள் பின்வரும் அட்டவணையிலிருந்து வெளிப்படும்.

சோர்	கண்ணீர், இரத்தம், பால் என்பன போல் சொட்டுசொட்டாய் வடி, விழு, சொட்டு, கசி	2883
சொரி	வழி, மழைபெய், அதிகமாகக் காய், மிகுதியாய் இரு, தாராளமாய் இரு, காய்ந்த சின்னம்மை நோய் செதில்கள் போல் விழு, உமியிலிருந்து அரிசி போல் சிதறு, பொழி, அம்புகள் போல் சொரி, பழங்கள் அல்லது இலைகள் போல் கொட்டு, காலியாக்கு, சாக்கிலிருந்து சோளத்தைக் கொட்டு, வண்டியிருந்து மணலைக் கொட்டு, அதிக அளவில் கொடு	2883
சுர	ஊறி வெளியேறு, வடி, சுரப்பால் வீங்கு, சீராக செல்லவச் சேகரிப்பு அதிகரி, பால் சுர, தொடர்ந்து வடி/வழி	2883

சொரி என்பது அதிக அளவில் பொருண்மை நீட்சி அடைந்துள்ளதாகத் தெரிகின்றது. *சோர்* என்பதும் *சுர* என்பது குறிப்பிட்ட அர்த்தங்களை வெளிப்படுத்திப் பயன்படுத்தப்படுவது தெரிகின்றது.

15. ஞரல்

2904 என்ற நோக்கீட்டு எண்ணின் *கீழ் ஞரல், நரல், நரற்று* என்ற மூன்று வினைகள் கொடுக்கப்பட்டுள்ளன. *நரல்* என்பது *ஞரல்* என மாறுவதை அண்ண மூக்கொலி பல் மூக்கொலி ஆக மாறும் வரலாற்று மாற்றத்தால் விளைந்ததாய்க் கருத இயலும். *நரற்று* என்பது *நரல்* என்பதன் செய்து வாய்பாட்டு வினையெச்சமாகும். செய்து வாய்பாட்டு வினையெச்சலிருந்து செயப்படுபொருள் குன்றா வினைகளின் உருவாக்கத்தைப் பற்றி முன்னரே பார்த்தோம். பிற நோக்கீட்டு எண் வினைகளிலும் *ஞ்* > *ந்* ஆக மாறுவதைக் காணலாம் (*ஞிமிர்* > *நிமிர்* – நோக்கீட்டு எண். 2922; *ஞால்* > *நால்*-2912; *ஞாறு* > *நாறு* – 2981; ஞெகிழ் > நெகிழ்-2923).

ஞரல்	ஒலி, சப்தமிடு	2904
நரல்	ஒலி, சத்தம் எழுப்பு, கிரீச்சிடு, உறுமு, (பசுபோல்) சப்தமிடு, கரை, (பல குரல்கள் போல்) ரீங்காரமிடு	2904

16. துழ

நோக்கீட்டு எண் 3356 *துழ, துழவு, துழாவு, துழா, துழை* என்ற வினைகளைக் கொண்டுள்ளன. இதில் *துழ* 'அகப்பையால் கிண்டு' என்பது தலைப்பு வினையாகத் தரப்பட்டுள்ளது. பின்வரும் பகுப்பாய்வு இவற்றின் ஆக்கத்தைத் தெளிவு படுத்தும்.

துழ = துழ்-அ

துழா = துழ்-ஆ

துழவு = துழ்-அவு

துழாவு = துழ்-ஆவு

துழை = துழ்-ஐ

மேற்கண்ட பகுப்பாய்விலிருந்து *அ, ஆ, ஆவு, ஐ* என்பனவற்றை ஆக்க ஒட்டுகளாகக் கருத இயலும். இருப்பினும் அகராதி *துழவு, துழாவு, துழா* என்பனவை ஒரே பொருளை உணர்த்தும்

வடிவம் வேறுபட்ட சொற்களாகவே கருதுகின்றது. *ஆ, அவு, ஆவு* என்பன மாற்றுருபன்கள் போல் தெரிகின்றது. *துழ* என்பது *துழா* என்பதுடன் பொருண்மை அடிப்படையில் மேலுறும். *துழை* புதிய அர்த்தம் பெற்று வேறுபடும். பின்வரு அட்டவணை இதைத் தெளிவு படுத்தும்

துழP	அகப்பையால் கிண்டு	3356
துழவு ~துழாவு~துழா	கையால் கிண்டு, அகப்பையால் கிண்டு, சூரியவெளிச்சத்தில் பரப்பப்பட்டிருக்கும் நெல் போன்றவற்றைக் கிண்டு, படகைத் துழாவு	3356
துழை	துடுப்புகளால் முன்னேறச்செய்	3356

17. தொடு

நோக்கீட்டு எண் 3480-இல் *தொடு, தொடுP, தொடக்கு, துடக்கு, தொடர், துடர்* என்ற ஆறு வினைகள் அடக்கப்பட்டுள்ளன. *தொடக்கு, துடக்கு* என்பன ஒரே பொருளைத் தரும் வேற்பட்டு வடிவங்களாகக் கருதப்படுகின்றன. பின்வரும் பகுப்பாய்வு இவற்றின் ஆக்கத்தை வெளிப்படுத்து.

தொடு = தொட்-உ

தொடக்கு = தொட்-அ-க்கு

துடக்கு = துட்-அ-க்கு

தொடர் = தொட்-அர்

துடர் = துட்-அர்

உ, அ-க்கு, அர் என்பவைக ஆக ஒட்டுகளாகும். *துட், தொட்* என்பன வேறுபட வடிவமுள்ள வேர்கள் அல்லாத பகுதிகளாகும். இவைகள் எவ்வாறு பொருண்மை அடிப்படையில் வேறுபடுகின்றன என்பது பின்வரும் அட்டவணையிலிருந்து வெளிப்படும்.

தொடு	தொடு, கைபடச் செய், தொடர்புகொள், தொடபாய் இரு, ஒற்றுமையாய் இரு, சேர்ந்திரு, உணர், கையாளு, பற்று, உபயோகி, (மற்றவரின் மனைவியுடன்) தவறான உறவு கொள்	3480

தொடுP	இணை, சேர், கட்டு, (வில்லில்) அம்பு தொடு, சங்கிலியால் இணை, கட்டு, சூழ்	3480
தொடக்கு	பிடி, கட்டு, சிக்கலில் மாட்டு, தடுக்கப்படு	3480
துடக்கு	பிடி, கட்டு, சிக்கலில் மாட்டு, தடுக்கப்படு	3480
தொடர்	தடையில்லாமல் பின் செல், பின்பற்று, இணைக்கப்படு, பின்தொடர், சக்தியுடன் விடாப்பிடியாக இரு, கட்டு, தாக்கு	3480
துடர்	ஒன்றன்பின் ஒன்றகப் பின்தொடர்	3480

3. திராவிடச் சொற்பிறப்பு அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள வினையடிகள்

திராவிடச் சொற்பிறப்பு அகராதிகளில் ஒவ்வொரு நோக்கீட்டு எண்களிலும் தந்துள்ள வினைகள் இங்கு அகர வரிசையில் தரப்பட்டு அவ்வகராதியில் அவைகளுக்குத் தரப்பட்டுள்ள ஆங்கில அர்த்தங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. முன்னர் கூறியபடி ஒவ்வொரு நோக்கீட்டு எண்களிலும் தரப்பட்டுள்ள சொற்களும் அர்த்தங்களும் அவற்றின் சொற்பிறப்பை வரலாற்று மொழியியல் அடிப்படையில் விளக்கி நிற்கும். (P என்பது ஒரு உருபொலியன் ஆகும். இது உருபொலியன் மாற்றத்தையும் வினைகளின் செயல்பாடு மாற்றத்தையும் உணர்த்தி நிற்கும்.)

அகரவரிசை எண்	வினைச் சொற்கள்	பொருள்	தி.சொ.பி. அகராதி காணப்படும் நோக்கிட்டு எண்
1.	அக்கு	குறை	252
2.	அக்குளுP	கூச்சம் உண்டாக்கு	2274
3.	அகப்படு	உட்படுத்தப்படு, பெறப்படு	7
4.	அகல்	விலகு	8
5.	அகலிP	விரி	8
6.	அகவு	நீள்	8
7.	அகவு	மயில் போல் ஒலி எழுப்பு, பாடு, மயில் போல் ஆடு, கூப்பிடு, அழைப்பாணை இடு	10
8.	அகழ்	அகழ், தோண்டு, கண்போல் பிடுங்கி எடு, வேரோடு பிடுங்கு	11

9.	அகற்று	நீக்கு, இல்லாதபடி ஆக்கு	8
10.	அகை	செழி, முளை	15
11.	அகைP	முளை, உயர்	15
12.	அகைP	உடை, துண்டுகளாக்கு, அடி, அடக்கு	15
13.	அங்கலாய்	அழுது புலம்பு, வருந்து, துன்புறு, பொறாமைப்படு, ஆவல்கொள்	31
14.	அங்காP	வாய்திற	34
15.	அசக்கு	குலுங்கு	37
16.	அசங்கு	அசை, நகர், குலுங்கு	37
17.	அசர்	மயங்கு, சோம்பு, களைப்படை	39
18.	அசர்த்து	சோம்பச்செய், களைப்படை	39
19.	அசாவு	வாடு, சோர்வடை, தளர்	39
20.	அசைP	சேர், கட்டு	43
21.	அசை	நகர், அலை, போய்விடு	37
22.	அசைP	அசை, நகர், கிளர்ச்சியுறு	37
23.	அசை	சோர்வடை, களைப்படை, பலவீனமாகு, மெதுவாக நட அல்லது ஓட்டு	39
24.	அஞ்சு	பயப்படு	55
25.	அஞர்	சோம்பியிரு, சோம்பலாய் இரு	37
26.	அட்டு	சேர், ஒட்டு,	96

27.	அட்டு	தேன்போல் ஒழுகு, பழுப்பு வெளிவரு, ஊற்று	97
28.	அடக்கு	ஒன்றின்மேல் ஒன்று அடுக்கு, ஒழுங்காகக் குவி,	79
29.	அடக்கு	கட்டுப்படுத்து	63
30.	அடங்கு	தணி, அடங்கு	63
31.	அடர்	இடைவெளியில்லாமல் செறிந்திருத்தல்	
32.	அடிP	அறைதல், தாக்கு, (காற்று) வீசு	74
33.	அடுP	பொருத்தமாக இரு, ஆகு, தகுதியாகு	78
34.	அடு	சமை, வறு, கொதிக்கவை, உருக்கு	76
35.	அடு	(அரிசி) குத்து, கொல், அழி, வெல்	77
36.	அடுP	பக்கத்தில் இரு, பாதுகப்பு வேண்டு, சேர்	79
37.	அடுக்கு	ஒன்றன்மேல் ஒன்றாக வை (அல்லது) ஒன்றன் பின் ஒன்றாக வை	80
38.	அடை	எத்து, போய்சேர், அடைக்கலம் பெறு, பறவைகள் போல் உறங்கு, பெட்டைக் கோழி போல் முட்டைமேல் இரு, பெறு	79
39.	அடைP	வாடகைக்கு விடு, ஒப்படை, வழங்கு	79
40.	அடைP	மூடுதல், தடு, நிறுத்து, பூட்டு, மறை	83
41.	அடை	சேகரித்தல், கொள், நெருக்கு	84
42.	அடை	பேணு, பாதுகா	86
43.	அடைச்சு	போடு, வை, (தலைமுடியில் பூ) செரு	79

44.	அடைசு	சேர்	79
45.	அண்ணா	தலையை மேல் நோக்கிப் பார், வாய்பிள, தலையை நிமிர்த்து	110
46.	அண்மு	ஓர் இடத்தை நெருங்கு	
47.	அண	தலை தூக்கு	110
48.	அணக்கு	இற, கொல்லப்படு	121
49.	அணங்கு	துன்புறு, வருந்து,	112
50.	அணர்	உயர், மேல்நோக்கி நகர்	110
51.	அணி	அழக்காய் இரு, அலங்கரி, ஆடை, அணிகலன்களை உடலில் போடு	116
52.	அணவு	மேலே போ, மேலே ஏறு	110
53.	அணுக்கு	துன்புறுத்து	112
54.	அணுங்கு	துன்புறு, வருந்து	112
55.	அணுகு	அருகில் செல்லு, நெருங்கு	120
56.	அணை	அணுகு, பக்கத்தில் வா, புணர்	120
57.	அணைP	சேர், மண் அணை, தழுவு, பிடி, கட்டு, ஈஅல்	120
58.	அணை	(தீ) கெடு	121
59.	அணைP	தீயைக் கெடுத்து, தாகம் தணி	121
60.	அத்து	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளைச் சேர், பொருத்து	145
61.	அத்து	சென்றடை	149

62.	அதக்கு	அரை, பழம்போல் அமுக்கு, வெற்றிலையை வாயில் ஒதுக்கு, அடங்கு, கட்டுப்படுத்து	133
63.	அதங்கு	அழுத்தத்தால் வெளியேற்று, திணிக்கப்படு	
64.	அதட்டு	அதிகாரமாகக் கண்டி, திடீர் சப்ததுடன் பயப்படுத்து,	137b
65.	அதிர்	அசை, (பூமி) குலுங்கு, நடுங்கு, மரம் விழு	137a
66.	அதிர்P	ஓசையிட்டு எச்சரி, மிரட்டு, கடி, கர்ஜி,	137a
67.	அதுக்கு	விரல்களால் அழுத்து, பிழி, வாயில் ஒதுக்கு	133
68.	அதுங்கு	அழுத்தப்பட்டு வெளியேறு, திணிக்கப்படு	133
69.	அதைP	வீங்குதல், ஆணவங்கொள், பெருமைப்படு	140
70.	அப்பளிP	அப்பு	157
71.	அப்பு	சந்தனம், மை முதலியவற்றை அதிகமாக பூசு	157
72.	அம்மு	உருமாறு, இரட்டைவேடம் போடு	185
73.	அமட்டு	எதிர்த்து அடக்கு, கொடுமைப்படுத்து, அச்சுறுத்து	160
74.	அமர்	நெருங்கு, பொருந்து, ஒத்திரு, விரும்பு, செய், செயல்படு	162
75.	அமர்	ஒத்துப்போ, தங்கு, சாந்தமடை, ஓய்வெடு, (வண்டல் போல்) கீழே தங்கு, (மண் மழையால்) நெருக்குமாகவும் கெட்டியாகவும் ஆகு, (வீட்டைப் போல்) ஈடுபடு, (வேலையில்) நிலைநிறுத்து,	161
76.	அமர்த்து	அமைத்திப்படுத்து, கீழ்படுத்து, வாடகைக்கு	161

		அல்லது குத்தகைக்கு ஏற்பாடு செய், (வீட்டு வேலைக்காரனை) பணியமர்த்து, (வாழ்க்கையில்) நிலைபெறு	
77.	அமர்த்து	அணையச்செய்	
78.	அமல்	நெருக்கமாயிரு, அடர்த்தியா வளர்ந்திரு	164
79.	அமிழ்	மூழ்கியிரு, முங்கியிரு	167
80.	அமிழ்த்து	மூழ்கடி, முக்கு, மூழ்கச்செய், அமுக்கு	167
81.	அமிழ்ந்து	மூழ்கு	167
82.	அமுக்கு	சதை, அழுத்து, பிழி, கீழ்நோக்கி அழுத்து, உள்நோக்கி அழுத்து	169
83.	அமுங்கு	மூழ்கு, அழுத்து, எடையால் சதைதல்	169
84.	அமை	இயக்கமற்றதாகு, அமைதியாகு, தணி, திருப்தியாகு, உடன்படு, நிலைகொள், பொருந்து, ஒத்துப்போ	161
85.	அமைP	இயக்கமற்றதாக்கு, பொறுக்கச்செய், கட்டுப்படுத்து	161
86.	அமை	ஒன்றாகக் கூடு, நெருக்கமாயிரு, இணைந்திரு, சேர்ந்திரு, போதுமானதாய் இரு, தயாராயிரு, பொருத்தமாயிரு, நிறைவாய் இரு, தயார்செய்	162
87.	அமைP	விளைவி, நிறைவேற்று, உருவாக்கு, தொடங்கு, நியமி, நிறுவு, ஒன்றுசேர், தயாராக்கு, தயாராய் இரு	162
88.	அமை	நெருக்கமாய் இரு	164
89.	அயக்கு	குலுக்கு	37

90.	அயர்	(மயக்கம், தூக்கம், குடி இவற்றின் போது) சுயநினைவை இழ, சோர்வடை, மற	39
91.	அயர்P	மற	39
92.	அயாவு	வருந்து	39
93.	அரக்கு	உள்ளங்கையில் ஒன்றை வைத்து கசக்கி, அல்லது காலால் மிதித்து அழுத்தித் தேய்	228
94.	அரங்கு	துன்புறு, அழிதல்,	228
95.	அரட்டு	பயப்படுத்து	3605
96.	அரள்	மிரட்சி அடை, திகில் அடை	3605
97.	அரவு	துன்புறுத்து	228
98.	அரற்று	புலம்பு, அழு, மனக்கிளர்ச்சியால் கத்து, ஒலி, துக்கப்படு	367
99.	அராவு	அரத்தால் தேய்	228b
100.	அரி	சிறு சிறு துண்டுகளாக நறுக்கு	212
101.	அரிP	கரையான் முதலானவை சிறிதுசிறிதாகக் கடி	212
102.	அரிP	சலி, சிறியவற்றையும் பெரியவற்றையும் பிரி, கழுவிப் பிரி	213
103.	அருக்கு	பயப்படு	3605
104.	அருகு	அரிதா, குறை, அரிதாக நிகழ்	221
105.	அருகு	பயப்படு	3605
106.	அருகு	அணுகு	222

107.	அருகு	பயப்படு	3605
108.	அருக்கு	பயப்படு	3605
109.	அருக்கு	அரிதாகச் செய், நிறுத்து, அழி, விலைமதிப்புள்ளதாகக் கருது	221
110.	அருக்கு	பேரம்பேசுவதில் விருப்பக்குறைவை காட்டு	223
111.	அருட்டு	மிரட்டு, பயப்படுத்து	3605
112.	அருவருP	வெறுப்புகாட்டு, வெறு	323
113.	அருவு	ஊற்றாக வெளிவந்து வழி	226
114.	அருவு	வெள்ளத்தால் கரையை அரிக்கப்படுதல்	228
115.	அருள்	கருணைகாட்டு, வழங்கு	227
116.	அருள்	பயப்படு	3605
117.	அரை	மசிதல், தேய்	228
118.	அரைP	அரை, தேய்த்து அழி, மசியச்செய், அழி	228
119.	அல்கு	சுருங்கு, குறை	252
120.	அல்லா	துன்புறு	236
121.	அல்லாடு	துன்புறு	236
122.	அல்லாடு	ஓரிடத்திலுருந்து மற்றொரு இடத்திற்கு அலை	240
123.	அல்லு	பின்னு,	260
124.	அலP	துன்புறு, வருந்து, தாழ்வுமனப்பான்மையால் வருந்து, பற்றாக்குறையாய் இரு	236

125.	அலக்கு	இயங்கச்செய், குலுக்கு	240
126.	அலங்கு	இயங்கு, குலுங்கு, ஊசலாடு, இயக்கத்தில் இரு	240
127.	அலங்கு	மனக்கலங்கு, தொந்திரவுக்கு உள்ளாகு	236
128.	அலசு	கழுவு	246
129.	அலசு	துன்புறு, வருந்து, சோர்வடை, தளர்	236
130.	அலசு	குலுங்கு, குழம்பு	240
131.	அலட்டு	தொந்தரவு செய், எரிச்சல் படுத்து, தொல்லைகொடு, குமுறு, கொந்தளி	243
132.	அலப்பு	பயனின்றி பேசு, குழந்தைபோல் பேசு, அர்த்தமில்லாமல் பேசு	245
133.	அலம்பு	ஒலி, கணகணவென்று ஒலி	245
134.	அலம்பு	கழுவு	246
135.	அலம்பு	இயங்கு, (குறைகுடம் போல்) ததும்பு, நடத்தையில் பிசகு, மாறுபடு, அலை, பயத்தால் அலையச்செய்	240
136.	அலமரு	குழம்பு, வருந்து	236
137.	அலமரு	சுழல்	240
138.	அலமல	குழம்பு, திகை, கவலைகொள்	236
139.	அலர்	மலர், திற	247
140.	அலர்த்து	மலரச்செய்	247
141.	அலவு	மனங்கலங்கு	236

142.	அலற்று	இடைவிடாமல், ஒழுங்கில்லாமல் பேசு	245
143.	அலறு	உறுமு, கர்ஜி, ஆடுபோல் கத்து, அழு, உரக்கச் சப்தமிடு, வருந்து	245
144.	அலுP	சோர்வாய் இரு, அதிக வேலை, பராமரிப்பு காரணத்தால் களைப்படை	236
145.	அலுக்கு	சிறிதாக அசை, வீம்பாக நட, செருக்காக நட	240
146.	அலை	அலைக்கழிக்கழிக்கப்படு, சோர்வுடன் சுற்றித்திரி	263
147.	அலைP	அலைக்கழி, எரிச்சலூட்டு, துன்புறுத்து, கோபப்படுத்து	263
148.	அலை	அலை, அசை, (தண்ணீரில் பிம்பம் போல்) அசை, பொருளுக்கு வேண்டி அங்கும் இங்கும் அலை, அலைத்து திரி, தள்ளாடு	240
149.	அலைP	இயக்கு, அசை, அங்கும் இங்கும் அலையச்செய்,	240
150.	அலை	மனதை அலைபாயச்செய்	
151.	அலைச்சு	கழுவு	
152.	அலைசு	அசை	240
153.	அலைசு	சோம்பலாய் இரு	236
154.	அலுக்கு	குழம்பு, பயப்படு	306
155.	அவி	அழுகிய பழம், காய்கறி போன்றன நொதிக்கு	2341
156.	அவி	நீரில் அல்லது ஆவியில் வேகு, புழுங்கு	268
157.	அவிP	நீரில் அல்லது ஆவியில் வேகவை	268

158.	அவி	அடக்கப்படு, கீழ்படி, அணை, தோல்வியுறு, குறைதல், அழி	267
159.	அவிP	அடக்கு, கீழ்படியச்செய்	267
160.	அவிழ்	தளர்	14
161.	அவிழ்P	அவிழச்செய், அவிழ், கட்டவிழ்	14
162.	அழல்	எரி, கனல், ஒளிவீசு, கோபமடை, பொறாமைப்படு	276
163.	அழி	அழி, அழுகு, தோல், துன்புறு	277
164.	அழிP	அழி, செலவழி	277
165.	அழு	அழுதல்	282
166.	அழுP	கூப்பிடு, அழைப்புவிடு	282
167.	அழுகு	அழுகு, கெடு	284
168.	அழுங்கு	கெடு, காயமடை, சிதைக்கப்படு	284
169.	அழுத்து	அமுக்கு, முக்கு, மூழ்கச்செய்	285
170.	அழுந்து	அழுத்தப்படு, மூழ்கியிரு, உறுதியாகு	285
171.	அள்ளு	கைகளைக் குவித்து எடு	290
172.	அள	கணக்கிடு, எல்லைப்படுத்து, வரையறு	295
173.	அள	கல, கலந்து பேசு, பேசு, வதந்திபேசு	296
174.	அளப்பள	உரையாடு,	296
175.	அளவளாவு	நெருக்கமான உடலுறவுகொள்	296

176.	அளவு	கல, கூடு	296
177.	அளாவு	வானைத் தொடும் அளவுக்குப் போ	
178.	அளாவு	கல, உரையாடு, சமூக உடலுறவுகொள்	296
179.	அளி	கல	296
180.	அளி	வழங்கு, கொடு	
181.	அளி	இணைந்திரு	301
182.	அளிP	பாதுகா, ஊட்டு, கருணைகாட்டு, ஆசைகாட்டு,	301
183.	அளி	கனி, அளவுக்கு அதிகமாக வேகு	302
184.	அளை	கலக்கப்படு	296
185.	அறி	தெரி, புரி,	314
186.	அறிவிP	அறியச் செய், அறிவி	314
187.	அறு	துண்டாகு, கயிறு போல் அறுந்துபோ, அழி, அழிந்துபோ	315
188.	அறுP	துண்டாக்கு, வெட்டு, உறுதிசெய், தீர்வுகாண்	315
189.	அறுP	ஜீரணி	316a
190.	அறை	அடி, (கொட்டு) அடி, சுத்தியை அடி, அலைகள் அடி/மோது	320
191.	அறை	பேசு, சப்தமிடு	319
192.	அனுக்கு	வருத்தப்படுத்து, துன்புறுத்து, அழி	112
193.	அனங்கு	துன்புறு, வருந்து, கொல்லப்படு	112

194.	அனுங்கு	வலி அனுபவி, வருந்து, வாடு, குழை	112
195.	அனுப்பு	அனுப்பு, உடன்போ	329
196.	ஆ	உள்ளதாகு, நிகழ், பெருந்து, ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இரு, ஒத்திரு, சமமாய் இரு	333
197.	ஆP	உருவாக்கு, உற்பத்திசெய்	333
198.	ஆக்கு	விளைவி, செய், உள்ளதாக்கு, உருவாக்கு, ஒழுங்குபடுத்து	333
199.	ஆகு	உள்ளதாகு, நிகழ், பெருந்து, ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இரு, ஒத்திரு, சமமாய் இரு	333
200.	ஆட்டு	இயக்கு, அலை, உசலாட்டு, குலுக்கு, விரட்டு, துன்புறுத்து, வெல், ஆடச்செய்	347
201.	ஆடு	இயங்கு, அலை, ஊசலாடு, குலுங்கு, நடனம் ஆடு, நாடகம் ஆடு, விளையாடு, உறவாடு, சண்டையிடு, அலைந்து திரி, சொல், செய், மகிழ்	347
202.	ஆய்	தேடு, பரிசோதி, தெரிந்தெடு, பறி, திரட்டு,	363
203.	ஆர்P	சப்பதமிடு	367
204.	ஆர்	நிரம்பு, பரவு, திருப்தியாகு, உண், குடி	368
205.	ஆர்	அணி, போடு	369
206.	ஆர்P	கட்டு, சுற்றிக்கட்டு, அணி, போடு	369
207.	ஆர்P	சண்டையிடு, போரிடு	370

208.	ஆர்	சேர், சொந்தமாய் இரு	2460
209.	ஆர்-ஆட்டு	தூங்கச்செய், உறக்காட்டு	374
210.	ஆரவாரிP	பெரும் ஓசையிடு, கர்ஜி	367
211.	ஆராய்	ஆராச்சிசெய், பரிசோதி, பரிசோதனைசெய், பரிசீலி	377
212.	ஆரி	சப்பதமிடு	367
213.	ஆலிP	ஓசைசெய், கர்ஜனைசெய்	386
214.	ஆலு	ஓசைசெய், ஓசையோடு அழு, மகிழ், ஆடு	386
215.	ஆவிP	கொட்டவிடு, வாய்திற	392
216.	ஆவிP	பெருமூச்சுவிடு, புகை வெளியிடு	393
217.	ஆழ்	மூழ்கு, முங்கு, நீரில் குதி, விழு	396
218.	ஆழ்த்து	மூழ்கச்செய், முங்கச்செய்	396
219.	ஆள்	ஆட்சி செய், கட்டுப்படுத்து, நிர்வகி	5157
220.	ஆறு	சூடு குறைதல், தணு, சமாதானம் அடை, அடங்கச்செய், புண் ஆறு	404
221.	ஆற்று	சூட்டைக் குறை, ஆறச்செய், தணி	404
222.	ஆற்று	வலிமையாகு, சாத்தியமாகு	407
223.	இக	விட்டுசெல், விட்டுச்செல்	411
224.	இக	பாய், கட, வரம்புகட, நிரம்பிவழி	3730
225.	இகல்	மறு, கருத்துவேறுபடு, வெறு, பகையாய் இரு, போட்டிப்போடு	413

226.	இகழ்	வெறு, கவனக்குறைவாய் இரு, மற	414
227.	இகுP	கொல், அழி, வீழ்த்து	415
228.	இகுP	கொடு	416
229.	இகைP	கொடு	416
230.	இச்சி	(ஒன்றை அடைய) தீவிரமாக விரும்பு	
231.	இச்சுக்கொட்டு	சீழ்க்கையடி	2610
232.	இசங்கு	போ, வழிகாட்டு, நடத்திச்செல்,	469
233.	?இசிP	சிரி	511
234.	இசை	நடக்கச்செய்	469
235.	இசை	பொருந்து, இசைவி, உடன்படு, சம்மதி	471
236.	இசைP	சேர்த்துக்கட்டு, ஒத்திரு	471
237.	இசைP	ஒலி, இசைக்கருவி போல் ஒலி, வெளிப்படுத்து, குறிப்பிடு, யாழ் போல் வாசி	470
238.	இஞ்சு	உறி, ஆவியாகு, பால் போல் உறை	430
239.	இடP	கீறல்விழு, கீறு, பிள, தோண்டு	432
240.	இடறு	பாதத்தை முட்டு, உதை	437
241.	இடி	உடை, தகர், தூளாகு,	432
242.	இடிP	துண்டுகளாக உடை, இடி	432
243.	இடிP	பேரொலியை எழுப்பு, கர்ஜனைசெய், அடி, தலைவலி, துடி	438

244.	இடு	வை, போடு, எறி, அம்பு விடு, கொடு, ஊற்று, மழைக்கொட்டு, வளை போடு, ஒப்பிடு, புதை,	442
245.	இடு	மோது	443
246.	இடுக்கு	விரல்களுக்கு இடையில் எடு, இடுக்கியால் எடு	444
247.	இடுகு	சுங்கு	445
248.	இடுங்கு	சுருங்கு	445
249.	இடை	இடங்கொடு, பின்வாங்கு	446
250.	இடை	களைப்படை	447
251.	இணக்கு	உடன்படச்செய், ஒன்றுசேர், இணை, பொருத்து	457
252.	இணங்கு	இசை	457
253.	இணை	ஒன்று சேர். பொருந்து, உடன்படு	457
254.	இணைP	சேர், கட்டு	457
255.	இமிர்	ஒலி, மெல்லிய குரலில் பாடு	466
256.	இமிழ்	ஒலி, இரை, ரீங்கரி	466
257.	இமிழ்	முளை, குலைதள்ளு	2489
258.	இமிழ்	ஆணையால் கட்டுப்படுத்தப்படு, கட்டுப்படு	2542
259.	இமிழ்P	இறுக்கு, கட்டு	2542
260.	இமைP	(கண்ணை) மூடித்திற, கண்ணடி, மின்னு, பிரகாசி	2545

261.	?இமைP	குறை, சுருங்கு	430
262.	இய	எல்லையைத் தாண்டு, மேம்படு, எல்லையைக் கட	3730
263.	இயக்கு	போகச்செய், (எருது அல்லது குதிரை போல்) பழக்கு	469
264.	இயங்கு	போ, தொடர், செயற்படு, தொழிற்படு	469
265.	இயம்பு	ஓசையிடு, சொல், கூறு	470
266.	இயல்	சாத்தியப்படு, ஏற்றுக்கொள், அணுகு, ஒத்திரு	471
267.	இயல்	காலால் நகர், நடனம் ஆடு	469
268.	இயற்று	செய்,	471
269.	இயை	இசை, உடன்படு, இசைவி, ஒத்திரு	471
270.	இயைP	சேர், இணை, சுவீகரி	471
271.	இர	பிச்சைஎடு, வேண்டு, கெஞ்சிப் பெறு, தயவுடன் வேண்டு	472
272.	இரங்கு	கருணைகாட்டு, மனம்வருந்து	473
273.	இரட்டிP	இருமடங்காக்கு	474
274.	இரட்டு	இருமடங்காகு	474
275.	இரலி	ஈரமாகு, நனை	3690(a)
276.	இரி	ஈரமாகு, நனை, குளிர், குளிரால் அல்லது நோயால் மரத்துப்போ	3690(a)
277.	இரி	அழி, பின்வாங்கு	479

278.	இரிP	தோற்கடி, அழியச்செய், விரட்டு	479
279.	இரு	உள்ளதாகு, உட்கார், உடையதாயிரு	480
280.	இருத்து	உட்காரச்செய்	480
281.	இருவு	பின்பற்று	480
282.	இருள்	இருளாகு, மங்கு, கறுப்பு நிறமகு, (மனம் போல்) இருள்	2552
283.	இரை	ஓசையிடு, கடல் போல் ஓலமிடு	489
284.	இரைP	கோபத்தில் கத்து, பாம்புபோல் ஒலிசெய்	489
285.	இலகு	பிரகாசி, மின்னு, பளபள	829
286.	இலங்கு	பிரகாசி, மின்னு, பளபள	829
287.	இலிர்P	(பயம் காரணமாக) முடி நிமிர்ந்து நில்	2565
288.	இழி	இறங்கு, கீழே விழு, இழிவாக உணர்	502
289.	இழிச்சு	கீழே இறக்கு, கீழே இறங்கச்செய், (வரி போன்றவை) கட்டு, (கட்டிடம் போன்றவற்றை) இடி	502
290.	இழித்து	கீழே இறக்கு, கீழே இறங்கச்செய், (வரி போன்றவை) கட்டு,	520
291.	இழுP	முச்சு வாங்கு	504b
292.	இழுக்கு	உயரத்திலிருந்து நழுவி விழு, உயந்த நிலையிலிருந்து கீழே இறங்கு, வழுக்கு, களைபடை, மன்னி, இழ, அழி,	503
293.	இழுகு	பூசு, தேய்	505

294.	இழை	சபதமில்லாமல் மூச்சுவிடு	504(b)
295.	இழை	தேய்	505
296.	இழை	நூல் நூல்	506
297.	இளக்கு	நெகிழச் செய், இளகச் செய், உருக்கு	510
298.	இளக்கு	அசை	509
299.	இளகு	சோர்வடை, களைப்படை, வாடிப்போ, இற, அழி	512
300.	இளகு	அசை	509
301.	இளகு	நெகிழ், உருகு	510
302.	இளிP	பரிகாசத்தால் மனம்தளர்	511
303.	இளி	சிரி, பரிகசி	511
304.	இளி	உரி, பறி	2585
305.	இளைP	களைப்படை, மயக்கமடை, சோர்வடை, பகைவர் முன் கீழடங்கு, பகைவரை விட பின்னடை, (நிலம் போல்) சுருங்கும் நிலையை அடை, சோர்வடை, (தாவரங்கள் போள்) வாடு	512
306.	இற	சாகு	514
307.	இறP	தாண்டிச்செல், மேன்மையடை	515
308.	இறக்கு	கொல்	514
309.	இறக்கு	கீழே கொண்டு வா	516
310.	இறங்கு	மேலிருந்துக் கீழே வா	516

311.	இறுP	உடை, முறி	520
312.	இறு	வரிகொடு	521
313.	இறுP	வடி	522
314.	இறுP	தங்கு	523
315.	இறுP	ஈட்டியை எறி	859
316.	இறு	(வரி, கடன்) கொடு	521
317.	இறுக்கு	அழுத்து	524
318.	இறுகு	அழுத்தமாக இரு, கெட்டிஆகு	524
319.	இறை	தலைகுனி, தொழு	516
320.	இறை	சிதறு, கலை	866
321.	இறை	விசிறியடி, வாரியடி, சிதறு, நீரை இழுத்து கொட்டு	866
322.	இறைஞ்சு	தலைகுனி, தொழு, கீழே விழு, (தேங்காய் குலைபோல்) தாழ்ந்து தொங்கு	516
323.	இனிP	இனிப்புச் சுவைக் கொண்டிரு, இனிமையாக இரு	530(a)
324.	இனை	அழு	532
325.	இனைP	துன்புறுத்து	532
326.	ஈ	கொடு	2598
327.	ஈட்டு	சம்பாதி	538
328.	ஈண்டு	சேகரி	538

329.	ஈர்P	இழு, கவர்	542
330.	ஈன்	பெறு, ஈனு, பிறப்பி, (ஆடு போல்) குட்டிபோடு, விளைவி,	555
331.	உக	மகிழ், விரும்பு	558
332.	உகட்டு	வெறு	678
333.	உகு	தூவல் அல்லத் முடி போல் உதிர், கீழே விழு, இற	562
334.	உகுP	விழவிடு, சிந்து, சிதறு, எறி, இலைகளை அல்லது தூவல்களை உதிர், கண்ணீர் உதிர்	562
335.	உச்சு	விளையாட்டில் வெல், சொத்து கிடை	581
336.	?உசவு	ஆலோசி, யோசி	2892
337.	?உசாவு	கேள், விசாரி, கேள்	2892
338.	உஞற்று	முயற்சிசெய், செய், நடத்து	584
339.	உட்கு	பயப்படு, வெட்கப்படு	703
340.	உடக்கு	அமைப் பொருத்து, அம்புவிடு	585
341.	உடறு	உண்டு ஜீரணி, முழுவதும் அனுபவி	600
342.	உடன்படு	இணங்கு, ஒத்துப்போ	945
343.	உடுP	உடுத்து	587
344.	உடுத்து	(ஆடை) அணி, (புடவை, வேட்டி முதலியன) கட்டு	587
345.	உடை	பானைபோல் உடை, (அழுத்தத்தால், கீழே விழுவதால்) துண்டாகு, பிள, அழி	946

346.	உடைP	துணாடாக்கு, உடையச்செய்	946
347.	உண்	(உணவு) சாப்பிடு, (நீர், கள்) குடி, (குழந்தை போல்) உறிஞ்சு, உணவு எடு, கடிக்காது விழுங்கு, மகிழ், அனுபவி	600
348.	உணக்கு	உணங்கச் செய், சூரிய வெளிச்சத்தில் உணக்கு	601
349.	உணங்கு	(தானியம், காய்கறி, மீன் போல்) உணங்கு, ஒல்லியாகு, சுருங்கு, இலை போல் உலர்ந்து சுருங்கு, நலி	601
350.	உணத்து	உணங்கச்செய், இளைக்கச்செய்	601
351.	உணர்	உறக்கத்திலிருந்து எழு, உணர்வுக்கு வா, சோர்விலிருந்து மீள், உணர்வுடன் இரு, அறி, கருது, பரிசோதி, அனுபவி, (கணவன் மனைவி போல்) சமரசமாகு	603
352.	உணர்த்து	கற்பி, அறிவூட்டு, உறக்கத்திலிருந்து எழுப்பு, தணிவி, நினைவுபடுத்து	603
353.	உணுக்கு	நுணுக்கு, பொடியாக்கு	3700
354.	உதவு	கொடு, உதவு, பயனுள்ளதாக இரு	609
355.	உதறு	(தூசி, அடைப்பு முதலியவை போகும்படியாக) பலமாக அசைந்து வீசு, (துணியை) உதறு, (உலகம், நண்பர் போன்றோரை) கைவிடு, குளிரால் அல்லது, பயத்தால் அல்லது கோபத்தால் கையை அல்லது காலை அல்லது உடம்பை உதறு	613
356.	உதிP	வீங்கு, அளவில் பெருகு	741

357.	உதிர்	(பிரிந்து தனித்தனியாக) கீழே விழு	615
358.	உதிர்P	உதறித்தள்ளு	613
359.	உதிர்	காற்றால் அசைக்கப்படு	613
360.	உதைP	பயத்தால் நடுங்கு, குளிரால் நடுங்கு	613
361.	உதைP	காலால் அடி	616
362.	உந்து	முன்காலால் அழுத்து	625
363.	உப்பு	ஊதிப் பெரு	666b
364.	உமி	உறிஞ்சு, சும்பு	2621b
365.	உமி	துப்பு, கொப்பளி	636
366.	உமிழ்	துப்பு, கொப்பளி	636
367.	உய்	வாழ், காப்பாற்றப்படு, விடுவிக்கப்படு	645
368.	உய்P	இரட்சிப்பை உறுதிசெய்	645
369.	உய்P	சும, எடுத்துசெல், வழிநடத்து	984
370.	உயங்கு	துன்புறு, வருந்து, (உடலாலும் மனதாலும்) வேதனைப்படு, மெலி, இளை, நிகிழ்வுத் தன்மையுடையதாய் இரு	3793
371.	உயர்	மேல்நோக்கி இயங்கு	646
372.	உயர்P	உயரச்செய், உயர்த்து	646
373.	உயர்	மறை	648
374.	உயல்	அலை, அசை	731

375.	?உயவு	கலந்தாலோசி	2892
376.	உயவு	துன்புறு	3793
377.	உயர்த்து	தூக்கு. புகழ், மரியாதைகொடு	646
378.	உயிர்P	மயக்கம் தெளி, உயிர்ப்பி, உயிரூட்டு	645
379.	உரP	ஓசை அதிகரி	647
380.	உரP	உறுதியாகு, (மண்போல்) கெட்டியாகு,	649
381.	உரசு	ஒன்றுடன் உராய்	665
382.	உரவு	உறுதியாகு, தீவிரமாகு	649
383.	உராய்	தேய், உரசு	665
384.	உராய்ஞ்சு	(விலங்கு மரத்தில் உடலை) தேய்	665
385.	உரி	(உடம்பின் தோல், மரத்தின் பட்டை, முதலியன) பிரிந்து வருதல் அல்லது நீங்குதல்.	652
386.	உரிP	தோல்நீக்கு	652
387.	உரிஞ்சு	ஒன்றுடன் உயசு, உரசித்தேய்	665
388.	உரிஞு	தேய்	665
389.	உருP	எரி, கோபமாயிரு	656
390.	உருP	வடிவெடு, தோன்று, உள்ளதாயிரு	657
391.	உருP	கனி, முதிர்	658
392.	உருகு	கரை, வெப்பத்தால் இளகு, மனமுருகு, இரக்கம்கொள்	661

393.	உருக்கு	உருகச்செய், வெப்பத்தால் இளகச் செய்,	664
394.	உருட்டு	(பந்துபோல்) உருண்டையாக்கு உருளச்செய்	664
395.	உருத்து	கோபப்படுத்து	656
396.	உருவு	(கட்டிலிருந்து அல்லது செருகி இருப்பதிலிருந்து அல்லது பிடிப்புடன் உள்ளதிலிருந்து ஒன்றை) பலமாக இருத்தல்.	
397.	உருள்	புரளுதல், சக்கரம் போல் சுற்று	664
398.	உரைP	தெரிவித்தல், கூறுதல்	468
399.	உரை	மாவாக, குழம்பாக மாறு, தேய்,	665
400.	உரைP	தேய்த்து குழம்பாக மாற்று, உரசித் தேய், உரைகல்லில் தேய்த்துப் பரிசோதி, பூசு, பளபளப்பாக்கு	655
401.	உரைசு	ஒன்றுடன் உரசு	665
402.	உரோசு	தேய்	665
403.	உரோஞ்சு	தேய்	665
404.	உலP	வீணாகு, நலிவடை, இற,	671
405.	உலம்பு	சப்தமிடு, கர்ஜி, இடி	996
406.	உலர்	(ஈரம்) காய். வாடு, வரள்	674
407.	உலர்த்து	உலரச்செய், காய வை	674
408.	உலவு	நடமாடு, பொழுதுபோக்காக நட, ஓட்டு, ஊர்வலமாகப் போ, பொழுதுபோக்காக நட, ஓட்டு, ஊர்வலமாகப் போ	2693

409.	உலறு	உலர், வாடு, காயப்படு, தேய்ந்துபோ	674
